# மாஜிமேயர் துரையப்பா யாழ். திரும்பினர்

## பிரதமரை சந்திப்பார்

யாழ்ப்பாணம், புதன்
முன்னாள் யாழ்ப்பாண எம். பி.யும் கலைக்கப்பட்ட யாழ்ப்பாண மாநகரசபையின் மேயருமான திரு. அல்பிரட் தங்கராசா துரையப்பா புருனியில் சில மாதங்கள் தங்கியிருந்த பின் நேற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.



பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கிய திரு. துரையப்பாவை கலைக்கப்பட்ட மாநகரசபையின் அங்கத்தவர் சிலரும் அவரது நண்பர்கள், உறவினர்கள், ஆதரவாளர்களுமாகபெருந்தொகையானோர் மாலை சூட்டி, வெடிகொளுத்தி வரவேற்றனர்.

யாழ்ப்பாண மாநகரசபை விவகாரம்பற்றி விரைவில் பிரதமரைச்சந்தித்துப் பேச விருப்பதாகவும், விரைவில் மாநகரசபையின் புதிய தேர்தலை நடத்தவேண்டுமெனக் கோரவிருப்ப தாக

(6-ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

[illegible] : 49 மலர் 9
[illegible] 589 இதழ் 158
National Tamil Daily தேசிய தினசரி

[illegible] பிலவங்க ஆடி 3 ரபி ஆகி. 10 புதன்கிழமை [19-7-67]

# "சிம்மாசனப் பிரசங்கம் நாம் ஏற்றுக்கொண்ட கொள்கை

# ஆளும்கட்சியில் வேறுபாடு இல்லை"

## மந்திரி இரியகொல்லை விளக்கம்

கொழும்பு, செவ்வாய்

"அரசாங்கத்தில் பிரிவினையோ வேற்றுமையோ கிடையாது. சிம்மாசனப் பிரசங்கத்தில் கூறப்பட்டிருக்கும் அரசாங்கத்தின் கொள்கையை அரசாங்கத்திலுள்ள அனைவரும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள்" என்று கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர் ஏ. இரியகொல்ல 'இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில்' கூறினார்

பொதுவேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு சில தொழிற்சங்கங்கள் ஆயத்தம் செய்வதாகவும் இதற்கு இடதுசாரிக் கட்சிகள் ஆதரவளிப்பதாகவும் தங்களுக்குத் தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் இரியகொல்ல தவருன வழியில் செல்ல வேண்டாமென்றும் நாட்டின் நலனையும் பொதுமக்களின் நலனையும் கருத்தில் கொண்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபடவேண்டாமென்றும் தொழிற்சங்கங்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டின் முன்னேற்றத்துக்காக அரசாங்கத்துக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கவேண்டியது தொழிலாளர் சங்கங்களினது கடமையென்றும் அரசாங்கத்துக்கெதிரான நாசவேலைகளில் ஈடுபடக்கூடாதென்றும்திரு இரியகொல்லகேட்டுக்கொண்டார்.

பொதுவேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு தொழிற்சங்கங்களைத் தூண்டிவிடவேண்டாமென இடதுசாரித் தலைவர்களை அமைச்சர் கோரினர்.

"நாட்டின் முன்னேற்றத்துக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினருடனும் வேறு எந்தப் பிசாசுடனும்கூட நாங்கள் சேர்ந்து உழைக்கத் தயாராக இருக்கிறோம். நாட்டுக்காக எந்தத் தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறோம்" என்றும் திரு இரியகொல்ல சொன்னார்.

பர்மாவிலிருந்து

## 83 ஆயிரம் அகதிகள் தமிழகம் திரும்பினர்

### முதலமைச்சர் அண்ணு தகவல்

சென்னை, ஜூலை 18
"1964ம் வருடம் ஜூலை மாதம் முதல் இதுவரை 82,755 அகதிகள் பர்மாவிலிருந்து தமிழகம்திரும்பியுள்ளனர்" என தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரை தெரிவித்தார்.

ராஜ்ய சட்டசபையில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

இவர்களுக்குத் தொழில்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஒரு பகுதியினர் விவசாயத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், இவர்களது நிவாரணத்துக்காக மத்திய அரசாங்கம் கடனுதவி அளித்துள்ளதாகவும் எடுத்துக் கூறினர்.

ராஜ்ய நிதி நிலைக்கேற்ப இவர்களுக்கு வசதிகள் அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## 'குடும்பத்தில் ஒருவரை மத சேவைக்கு அர்ப்பணியுங்கள்'

### கத்தோலிக்க மக்களுக்கு மன்னர் எம். பி. அழைப்பு

யாழ்ப்பாணம், புதன்
கத்தோலிக்க மக்களுக்கும் இலங்கை மக்களுக்கும்அளப்பரிய சேவைகளை இனம், மதம், மொழி பாராது தியாக உணர்வுடன் செய்த மேல்நாட்டு சந்நியாசகன்னியாஸ்திரிகளை அரசாங்கம் முன்யோசனையில்லாது அனுப்பியதினுல் இன்று ஏற்பட்டுள்ள கஷ்டங்களை அரசாங்கம் நன்கு உணருகின்றது. தங்கள் உறவினர்களையும் தேசத்தையும் மறந்து எமது நாட்டுக்குச் சேவை செய்ய வந்தவர்களின் தியாக உள்ளங் கொண்ட சந்நியாச கன்னியாஸ்திரிகள் எமது நாட்டிலும் தோன்ற வேண்டும். ஒவ்வொரு கத்தோலிக்க குடும்பமும் ஒரு மகனையோ, ஒரு மகளையோ கத்தோலிக்க குருத்துவ சேவைக்கு உதவ முன்வர வேண்டும்.

மொசொற் கொரியின் மேற்றிராணியாரும் திருகோணமலை துணை ஆயருமான மகாவந்.வ. தியோகுப்பிள்ளை ஆண்டகைக்கு யாழ்ப்பாண மேற்றிராசன பொது மக்களால் நடாத்தப்பட்ட வரவேற்பு வைபவத்திற்குத் தலைமை வகித்த மன்னர் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் துணை ஆயர் தமது தியாகப் பண்புகளைத் தம்மிடம் கல்வி பெற்றவர்களிடமும் தாம் சென்றவிடங்களிலும் பரப்பியதோடு ஈழம் முழுவதற்கும் பரப்பியுள்ளாரென்றும் கூறினர்.

துணை ஆயர் தமக்கு அளிக்கப்பட்ட உபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப்பேசுகையில். யாழ்ப்பாண மேற்றிராசனம் தமக்குத் தாயகமென்றும், அதனுல் தாமும் இறை பணியை எமது முன்னேடிகளான கத்தோலிக்கப் பெரியார்களின்அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செய்வதற்கு இறையருளை வேண்டி நிற்பதாகவும் கூறினர். இறைவன் எமக்குச் செய்த உதவிகளுக்கு நன்றிக் கடனுக நாம் செபமோ, தவமோ செய்வதிலும் பார்க்க கத்தோலிக்க சேவைக்கென குடும்பத்திலொருவரை அர்ப்பணிப்பதே இறைவனுக்கு நாம் செய்யும் மேலான பணியாகும் என்றும்குறிப்பிட்டார்.

## இளம் பெண் விடுதலை

யாழ்ப்பாணம், புதன்
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இளம்பெண்ணை நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் ஜனுப் எம். ஜமீல் விடுதலைசெய்தார்.

சந்தேகத்திற்கு இடமான முறையில் நடந்துகொண்டதாக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இப்பெண், மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டு நேற்று முன் தினம்வரை ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

ஆளும் கட்சியிலிருந்து

## குண்டசாலை எம். பி. ராஜினமாவாம்

### பார்லிமெண்டில் எதிர்க்கட்சி எம். பி. தகவல்

கொழும்பு, செவ்வாய்
அரசாங்கத்திலிருந்து விலகுவதற்குத் தயாராக தமது ராஜினுமாக் கடிதத்துடன் குண்டசாலை எம். பி. திரு. விஜயசிறி இருக்கிருர் என்ற தகவலை எதிர்க்கட்சிஎம்.பி.யான திரு. டி. பி. ஆர். வீரசேகரா இன்று ஜனப்பிரதிநிதிகள்சபையில் வெளியிட்டார்.

அரசாங்கக்கட்சிக்குள் பிரிவும் பிளவும் அதிகரித்து

[6-ம் பக்கம் பார்க்க]

## விமான ஒப்பந்தத்தில் கமிஷன் பெற்றனராம்

திரு. டி. பி. ஆர். வீரசேகரா மற்ருெரு முக்கியதகவலையும் இன்று ஜனப்பிரதிநிதிகள்சபையில் தெரிவித்தார்.

எயர்சிலோன் ஸ்தாபன டைரக்டர்கள் இருவர் 'நோர்ட்' விமானம் வாங்குவது சம்பந்தமாக நடத்திய பேச்சுவார்த்தைகளில் 5சதவீதமான கமிஷன் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததென்றும் திரு. வீரசேகரா சொன்னர்.

தென்கிழக்காசிய நாடுகள் எதிலும் விமான சேவையிலீடுபட்டுள்ள எந்த ஸ்தாபனமும் 'நோர்ட்' விமானத்தை வாங்கவில்லை. பயமின்றிப் பிரயாணம்செய்யக் கூடியதுமல்ல; இலாபமுமல்ல 'நோர்ட்' விமானம். இவைகளை எதற்காக எயர் 'சிலோன்' வாங்கவேண்டும்' என்று திரு. விஜயசேகரா கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

முள் நிறைந்த செடியிலேதான் வனப்பும் வாசனையும் நிறைந்த ரோஜா மலர்கிறது. அது போலவே சொல்லொணு துன்பங்களுக்கும் தாங்கொணு எதிர்ப்புகளுக்கும் மத்தியில் தான் உண்மை பூத்துக் குலுங்குகிறது.

—மகாத்மா காந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க
ஆடி 3உ (19-7-67)

## ஏன் இந்த பொருமை?

சிங்களத்தை போதனு மொழியாகக் கொண்ட பாடசாலைகளைவிட தமிழைப் போதனுமொழியாகக் கொண்ட பாடசாலைகள் பலவற்றிலுமே விஞ்ஞான போதனைக்குரிய விஞ்ஞான கூட வசதிகள் அதிகம் இருப்பதாகவும் இதனுல் அடுத்த அறிவித்தல் வரை தமிழைப் போதனு மொழியாகக் கொண்ட பாடசாலைகளுக்கு விஞ்ஞானகூட வசதிகள் அளிக்கப்படக் கூடாது என்று கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல தீர்மானித்திருப்பதாகக் கொழும்பிலிருந்து வெளியாகும் ஓர் ஆங்கிலத்தினசரி முதற்பக்கத்தில் ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது. இச்செய்தி உண்மையானுல், அதாவது கல்வி அமைச்சர் இவ்வாறு உத்தரவிட்டிருப்பது உண்மையானுல் இதைவிட வேதனையளிக்கக்கூடியதும் அரசாங்கம் வெட்கப்படக் கூடியதும் வேறு எதுவும் இருக்கமுடியாது.

நாட்டிலுள்ள 35 பாடசாலைகளுக்கு விஞ்ஞான கூடவசதி அளிக்க கல்வி அமைச்சு ஒழுங்கு செய்துள்ளதென்றும் இவையாவும் சிங்களப்பாடசாலைகளென்றும் கூறும் அந்தச்செய்தியில் விஞ்ஞானகூட வசதியுள்ள தமிழ்ப் பாடசாலைகளின் அளவுக்குச் சிங்களப்பாடசாலைகளுக்கும் விஞ்ஞான கூட வசதி அளிக்கப்படும் வரை தமிழ்ப் பாடசாலைகளுக்கு வசதியளிக்கப்படமாட்டாதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களப் பாடசாலைகள் பலவற்றிற்கும் விஞ்ஞான கூட வசதியில்லாததால் தமிழ்ப் பாடசாலைகளுக்கும் விஞ்ஞானகூட வசதி அளிக்கக்கூடாதென்று கூறுவது, 'அடுத்தவீட்டுக்காரி ஆண்குழந்தை பெற்றதைக்கண்டு யாரோ ஒருத்தி அம்மிக்குழவியை எடுத்து அடிவயிற்றில் குத்திக்கொண்டாளாம்' என்ற பழமொழியை நினைவூட்டுவதாக இருக்கிறது.

விஞ்ஞானக் கல்வியை வகுப்புவாதக் கண்கொண்டு நோக்குவது நாட்டிற்கு எந்தவிதத்திலும் நன்மை தராது. சகல மாணவருக்கும் விஞ்ஞானக் கல்வி அளிக்கப்பட வேண்டும். இது அவர்களுக்கு மறுக்க முடியாத உரிமையும் கூட. சோஷலிஸ்ட் நாடுகள், ஜனநாயக நாடுகள், காமன்வெல்த் நாடுகள் ஆகிய முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் அனைத்திலும் சகல பிள்ளைகளுக்கும் விஞ்ஞானக் கல்வி அளிக்கப்படுகிறது. இலங்கையில், பாடசாலைகளை அரசாங்கம் தன்வசமாக்கிக்கொள்வதற்கு முன்னர், அரசாங்க பாடசாலைகளைவிட, உதவிநன்கொடைபெற்ற பாடசாலைகள்பலவும்விஞ்ஞானக்கல்வியின் அவசியத்தையும் தேவையையும் உணர்ந்து தங்கள் பாடசாலைகளில் விஞ்ஞானகூடங்களையும் அதற்கான சாதனங்கள், உபகரணங்களையும் தேடிக்கொண்டன. இவற்றுக்குப் பொதுமக்களும் கொடைவள்ளலும் தாராளமாக நிதிஉதவி அளித்தனர். கதம்ப நிகழ்ச்சிகள், களியாட்டவிழாக்கள் எனஇப்படி ஆசிரியர்களும், மாணவர்களுமாகப் பெருமுயற்சிகள் செய்து நிதிதிரட்டி விஞ்ஞான கூடங்களை அமைத்துக்கொண்டனர்.

யாழ்ப்பாணத்தை விட இரண்டுமடங்கு ஜனத்தொகையுள்ள கண்டி மாவட்டத்தில் 12 பாடசாலைகளிலும் யாழ்ப்பாணத்தைப்போன்ற அளவு ஜனத்தொகையையுடைய காலி மாவட்டத்தில் ஐந்து பாடசாலைகளிலும் தான் விஞ்ஞான கூட வசதியிருப்பதாகவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 33 பாடசாலைகளில் இந்த வசதியிருப்பதாகவும் இன்று ஒப்பிட்டுப் பார்த்துப்பொருமைப்படுவதில் அர்த்தமில்லை. யாழ்ப்பாண மாவட்டத்திலும்கூட தீவுப் பகுதிகளில் இந்த வசதி இல்லை. வவனியா, மன்னர், திருக்கோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில்கூட யாழ்ப்பாணத்தி லுள்ளது போன்று விஞ்ஞானகூட வசதியில்லை. இவைகளும் தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகள்தானே! இந்த மாவட்டங்களைப் பற்றி கல்வி அமைச்சு ஏன் கவலை கொள்ளவில்லை?

விஞ்ஞானக்கல்வி வசதி எல்லோருக்கும் கிடைப்பதற்கு என்னவழி வகைகளை மேற்கொள்ளலாம் என்பதில் கல்விஅமைச்சர் கவனம் செலுத்தினுல் நன்மை கிடைக்கலாம். சகல பாடசாலைகளிலும் விஞ்ஞானக்கல்வி போதிப்பதற்கு கல்விமான்களின் ஆலோசனையுடன் ஒரு திட்டம் வகுப்பது பயன்தரலாம். ஜனத்தொகைக்கேற்பவும் தொகுதி ரீதியாகவும் இத்திட்டத்தை வகுத்து வருடாவருடம் நிதி ஒதுக்கி செயல் படுத்தலாம். இதைவிடுத்து முன்யோசனையுடன் நடந்து கொண்டவர்களைப் பார்த்து பொருமைப்படுவதில் லாபம் என்ன?

## சிரமதானம்

புதுக்குடியிருப்பு, செவ் முத்தையன் கட்டுக் குளம் படித்த வாலிபர் விவசாயத் திட்டத்தில்சிரமதான முறையில் மிளகாய்ப்பயிர் நடுவதில் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய மேல்வகுப்பு மாணவர்கள் ஈடுபட்டனர்.

## இடமாற்றத்துக்கு ஆட்சேபம

புதுக்குடியிருப்பு, செவ் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய அதிபர் திரு கு. வி. செல்லத்துரைக்கு தந்த இடமாற்ற அறிவித்தலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கமும் கிராமசபையும் கிராம முன்னேற்ற சங்கமும் ஆட்சேபித்து கல்வி அதிபருக்கும் மாவட்ட வித்தியாதிபதி எம். பி. ஆகியோருக்கும் தந்தியடித்துள்ளன.

பெற்றோர் ஆசிரியர் சங்கமும் கிராமசபைதலைவர் மாவட்ட வித்தியாதிபதி எம். பி. ஆகியோரைச்சந்தித்து மாற்றத்தைத்தடை செய்ய கேட்க இருக்கின்றனர்.

## காங்கேசன்துறையை நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்த ஆட்சேபம்

### மக்கள் தாங்கமாட்டார்கள் என்கிறுர் உபதலைவர்

காங்கேசன்துறை, செவ். 'காங்கேசன்துறை துறைமுகம் அதன் முழுமையான வடிவம் பெற்று பூர்த்தியாக்கப்பட்ட பின் காங்கேசன் துறையை மாநகர சபையாகக் கூட ஆக்கலாம்.'

இவ்வாறு காங்கேசன்துறைப் பட்டினசபை உபதலைவரும் மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவருமான டாக்டர் சு. வே. சீனிவாசகம் தெரிவித்தார்.

காங்கேசன்துறைப் பட்டின சபையை நகரசபையாக்குவதை ஆட்சேபிக்கு முகமாக காங்கேசன்துறைப பட்டின சபைமண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர்மேற் கண்டவாறு எடுத்துக் கூறினுர்.

டாக்டர் சீனிவாசகம் மேலும் கூறியதாவது:-

காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லையிலிருக்கும் மயிலிட்டி சூருவளியால் பாதிக்கப்பட்டு மக்கள் சாதாரண நிலையில் வாழ முடியாத நிலையிலிருக்கிறுர்கள். இந்த நிலையில் காங்கேசன்துறையை நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்துவதால் அவர்கள் மேலும் பாதிக்கப்படுவார்கள். அத்தோடு காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள்ளிருக்கும் மற்ற வரியிறுப்பாளர்களும் மேலதிகவரிகட்ட முடியாத நிலையிலேயேஇருக்கிறுர்கள் என்பதை அங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

தற்பொழுது 9 வீதம் கட்ட வேண்டிய வரியைபட்டினசபை அங்கத்தவர்கள் பெருமுயற்சியால் 8 வீதத்துக்கும் குறைத்துள்ளார்கள். நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டால் 15 வீத வட்டியைச் செலுத்தவேண்டியிருக்கும்.

இப்பொழுதே நிதி நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது. அவ்வித சூழ்நிலை நிலவும் போது அந்தஸ்து உயர்த்துவது மேலும்நெருக்கடியைத் தோற்றுவிக்கும்.

அங்கத்தவர்களாகிய நாங்கள் பட்டினசபைத் தலைவர் இதுபற்றி ஆராய்வதற்காக ஒரு அவசரக் கூட்ட மொன்றைக்கூட்டுவார்என எதிர்பார்த்தோம். ஆனுல் மாதாந்தத்தில் கூட இது விஷயம் எடுத்துக் கொள்ளப் படவில்லை.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட எங்களை, அமைச்சர் இதுபற்றி அபிப்பிராயம் கேட்காதது வருத்தம் தருவதாக இருக்கிறது.

இப்பட்டினசபை நகரசபையாக்கப்பட்டால் இதனை ஆட்சேபிக்கும் 4 அங்கத்தவர்களும் ராஜினுமாச் செய்வோம்'' என்றும் அவர் தெரிவித்தார்.

1ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. கிருபாமூர்த்தி, 6ம் வட்டார அங்கத்தவர் திரு. பி. இம்மானுவல், 5ம் வட்டார அங்கத்தவர் திரு. சி. சிவனடியான், முன்னுள் பட்டினசபை உப-தலைவர் திரு. வி. இரத்தினராஜா, திரு. யோகநாதன் மற்றும் பட்டினசபை எல்லையுள் உள்ள இளைஞர் முன்னேற்றக் கழகங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள், விளையாட்டுக்கழகங்கள் முதலிய 41 பல்வேறு கழகங்களின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் பேசினர்.

பிரதம மந்திரி, உள்ளூர் ஆட்சி மந்திரி, காங்கேசன் எம். பி., தனிநபர் கமிஷனர் ஆகியோருக்கு நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்துவதனை ஆட்சேபித்து அவசர மகஜர் ஒன்றை அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஒன்பது பேர் கொண்ட உபகமிட்டி ஒன்றும் தெரியப்பட்டது.

## உருளைக்கிழங்கு உற்பத்தியில் வடபகுதி கவனம் செலுத்தவேண்டும்

### கலைவிழாவில் வட்டுக்கோட்டை எம. பி.

சுழிபுரம், செவ்வாய் ''இன்று இந்த நாட்டில் வாழும் சகல தமிழ் பேசும் எம். பி. க்கள் தேசிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக இருக்கின்றனர். தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் எமது உரிமைகள் பல கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. தென்இலங்கையில் நடைபெறும் இடைத் தேர்தல்களில் எதிர்க்கட்சியினர் மக்கள் மத்தியில் பரப்பி வரும் பொய்ப்பிரசாரத்துக்கு அரசாங்கம் செவிசாய்க்கவேண்டிய நிலைமையிலும் அவற்றுக்குப் பதில் கூறவேண்டிய கட்டத்திலும் உள்ளது.

எமது உரிமைகளைப் பெறுவதில் நாம் சற்றுத் தளர்ந்திருப்பதுபோல் தோன்றினுலும் எமது லட்சியத்தை என்றும் கைவிடமாட்டோம். அவற்றுக்காக நாம் என்றும்உழைப்போம்'' என வடலியடைப்பு சனசமூக நிலைய கலைவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம்குறிப்பிட்டார். திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் ''அரசாங்கம் அரிசிப் பங்கீட்டுமுறை பற்றிச் சிலர் கண்டிக்கின்றனர் இலவச அரிசித் திட்டத்தினுல் ஏழை மக்கள் நன்மையடைகின்றனர். அரிசிப் பற்றுக்குறையை நீக்க அரசாங்கம் உப உணவு உற்பத்தியில் அதிக கவனம் செலுத்திவருகின்றது. எமது நாடு உணவு விஷயத்தில் தன்னிறைவு பெற்றுத் திகழவேண்டும். இன்று வடபகுதி மக்கள் இந்நாட்டுக்கு வேண்டிய வெங்காயத்தை விளைவிக்கின்றனர். அதேபோல் உருளைக்கிழங்கு உற்பத்தியிலும் கவனம் செலுத்த வேண்டும்'' என்றுர்.

வலிமேற்கு காரியாதிகாரி திரு. மாணிக்க நடராசா பேசுகையில், ஒவ்வொருவனும் சிந்திக்க எண்ணும் போதுதான் கலைபிறக்கிறதென்றுர். அவர் மேலும் பேசியதாவது:- ''நாம் மாற்றுன் கையை எதிர்பார்த்து வாழாமல் சொந்தப் பலத்தில் வாழவேண்டும். எமது வாலிபர்கள் இன்று தெருத்தெருவாகச் சுற்றுகின்றுர்கள். ஏன் இப்படிச் சுற்றுகிறுர்கள் என்பதைச் சிந்திப்பாரில்லை. கால் சட்டை உத்தியோகத்தையும் பேனு ஒட்டும் உத்தியோகத்தையும் எதிர்பார்த்துக் காலத்தைக் கழிக்காது தாமும் வாழ்ந்து நாடும் சிறக்க கமத்தொழில் கைத்தொழில் போன்ற வேலைகளில் இளைஞர்கள் ஈடுபட முன்வரவேண்டும். இன்று அரசாங்கத்தால் நடாத்தப்படும் குடியேற்றத் திட்டத்தில் அதிக ஈடுபாடு கொள்வதன்மூலம் பலத்த நன்மையடையலாம்.''

பண்டிதர் அ. சண்முகநாதன், திரு. என். சிவஞானம், செல்வி கா. ஜெயந்தி, புலவர் கா. வேல்முருகன், திருமதி வ. இராமலிங்கம் உட்பட மற்றும் பலர் பேசினர். நிலைய உறுப்பினர்களால் நாடகமும் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

## நாட்டிலும் நகரிலும்

இந்தியாவில் இன்று ஏற்பட்டுள்ள முக்கியமானபிரச்னைகள் இரண்டு. முதலாவது பிரச்னை, வருடா வருடம் பெருகிக்கொண்டு வரும் சனப் பெருக்கத்துக்கு போதிய உணவு உற்பத்தி செய்வது. இன்னும் சுமார் மூன்று வருடங்களுக்குள் அங்கு கடும் பஞ்சம் ஏற்படக்கூடும் என்று சிலர் பயமுறுத்துகிறுர்கள். ஏற்கனவே பீகார் முதலிய மாகாணங்களில் உணவுப் பஞ்சம் தலைதூக்கியிருக்கிறது.

இந்த உணவு நெருக்கடியோடு சம்பந்தப்பட்டது தான் இரண்டாவது பிரச்னை சனத்தொகை அதிகரிக்க, அதிகரிக்க அத்தனை வயிறுகளையும் நிரப்ப வேண்டுமல்லவா? ஆகையால் சனப் பெருக்கத்தை தடைசெய்ய வேண்டும். இதுவே இரண்டாவது பிரச்னை.

இவ்விரு பிரச்னைகளையும் தீர்ப்பதில் இந்திய அரசாங்கம் மிக தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

குடும்பக் கட்டுப்பாட்டு வேலைகள் அங்கே நகரத்துக்கு நகரம், கிராமத்துக்கு கிராமம் ஒழுங்காக நடைபெறுகின்றன. கர்ப்பம் உண்டாகாமல் இருப்பதற்கு அரசாங்க பெண் டாக்டர்கள் பெண்களுக்கு 'லூப்' என்ற வளையம் கொடுத்து உதவுகிறுர்கள். பெரும்பான்மையான மக்கள் இந்தியாவில் கிராமத்திலேயே வாழ்கின்றுர்கள். கிராமத்து பெண்கள் இந்த நவீன கருத்தடையை அதிகமாக விரும்புவதில்லை என்று தெரியவருகிறது.

வைதிகப் பெண்கள் அல்லவா? 'ஆண்டவன் கொடுக்கிறுர், அதை எப்படித் தடுப்பது?' என்று ஒரு பாட்டி கூறுவாள் இன்னெரு அத்தை 'யாழினிது குழலினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்று திருவள்ளுவரையே கூட்டிக் கொண்டு வந்துவிடுவாள் தனது கட்சியின் சார்பாக.

இப்படியே குடும்பக் கட்டுப்பாட்டுக்கு எதிராக பல தடைகள் உண்டு.

தமிழரசுக் கழகத் தலைவரும், சென்னையில் தி. மு. க. அரசாங்கத்தை ஆதரிப்பவருமான 'சிலம்புச்செல்வர்' திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் இந்தப் பிரச்னைக்கு ஒரு யோசனை தெரிவித்துள்ளார். 'பெண்களுக்கு 'லூப்' கொடுக்கப்படாது. அதை அவர்கள் ஏற்றுக் கொள்ள தயங்குவார்கள். ஆகையால் ஆண்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்வதன் மூலம் குடும்பக் கட்டுப்பாடு செய்யலாம்; என்று அவர் கூறுகிறுர்.

ஆண் வர்க்கம் இந்தயோசனையை ஏற்றுக்கொள்ளுமோ, மறுக்குமோ யான் அறியமட்டேன். ஒரு மிகவும் இக்கட்டான நிலைமை. இடியப்பச் சிக்கல் என்றும் கூறலாம்!

ஃ ஃ ஃ

இது இவ்வாறிருக்க, 'ஐயோ, தெய்வமே! என் சந்ததி தளைப்பதற்கு ஒரு குழந்தை இல்லையே!' என்று தவி தவிப்போர் எத்தனை பேர் இருக்கிறுர்கள்?

ஸோபியாலோறன் உலகமறிந்த சினிமா நடிகை கோடீஸ்வரி, இரண்டு குழந்தைகள் கர்ப்பத்திலேயே அழிந்துபோய்விட்டன. இப்பூலோக சீவியத்தில் எல்லாமிருந்தும் புத்திர பாக்கியம் ஒன்று மட்டும் கிடைக்கவில்லையே என்று அந்த அம்மணி பிரலாபிக்கிறுள்.

குழந்தை இல்லையே என்று சிலர் பரிதவிக்கிறுர்கள். குழந்தை அதிகமாகிவிட்டதே என்று கவலைப்படுகிர்கள் வேறு சிலர்.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூயஸ் பகுதியில் அமைதி நிலவுகிறது: ஐ. நா. பார்வையாளர் பணி ஆரம்பம்

## 600 போர் கைதிகளை சிரியாவுக்கு-இஸ்ரேல் அனுப்பியது

கெய்ரோ, ஜூலை 18

**சூயஸ் கால்வாய்ப் பகுதியில் தொடர்ந்து அமைதி நிலவி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இப்பகுதியில் இம்மாதம் 16-ந் திகதி அதிகாலை சண்டை நிறுத்தம் ஏற்பட்டபின் இவ்விதநிலை நீடித்துவருவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.**

### ஐ.நா. பார்வையாளர்

இதற்கிடையில் கால்வாய் நெடுகிலும் ஐ.நா. பார்வையாளர்களை நிறுத்துவது பற்றி ஏற்பாடுகளைச்செய்ய கெய்ரோவந்து சேர்ந்துள்ள ஜெனரல்புல் தமதுபணியை எவ்வளவு நன்ருக நிறைவேற்றமுடியுமோ அவ்வளவு நன்ருக நிறைவேற்றுவதில் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

ஐ. நா. பார்வையாளர்கள் கோஷ்டியில் எல்லாமாக 30 பேர் இருப்பார்களெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கோஷ்டியில் அங்கம் வகிப்பவர்கள் எந்தெந்தத்தேசத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென கெய்ரோ, இஸ்ரேல் ஆகிய நாடுகள் தெரிவித்திருந்த நிபந்தனை பற்றி ஆராய்ந்து சுமுகமாக இதைத் தீர்த்து வைப்பதில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் துருப்புகளுக்கும் ஐ.அ.குடியரசுத் துருப்புகளுக்குமிடையே போர் நிறுத்த எல்லைக்கோட்டை நிலை நாட்டுவதுபற்றிஎழுந்துள்ள பிரச்னையைத் தீர்த்து வைப்பதிலும் போர்நிறுத்தக் கமிஷன் ஆராய்ந்துவருகிறது.

### ஐ.நா.மகாசபை இறுதி விவாதம்

ஐ.நா. [நியூயோர்க்], ஜூலை 18

மேற்கு ஆசிய நிலைமை பற்றி ஐ. நா. மகாசபை உறுப்பு நாடுகள் நடாத்தி வந்த விவாதம் எவ்விதமுடிவுக்கு வராமலிருந்தாலும் கூட வரும் வியாழக்கிழமையுடன் முடித்து வைக்கப்படுமென அறிவித்தல் செய்யப்பட்டுள்ளது.

### அரபுத்தலைவர்கள் முடிவு

கெய்ரோ, ஜூலை 18

கெய்ரோவில் பேச்சுவார்த்தை நடத்திய சிரியா, ஈராக், ஐ. அ. குடியரசு, அல்ஜீரியா ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகளும் சூடான் பிரதமரும் மேற்குஆசிய விவகாரம் பற்றிய தமதுபேச்சுவார்த்தையின்முடிவில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு சுவடுகளைத் துடைக்க வருங்காலத்தில்தக்கநடவடிக்கைஎடுப்பதென சங்கற்பம் செய்துகொண்டனர்.

ஈராக், அல்ஜீரிய ஜனாதிபதிகள் ரஷ்யப்பிரதமருடன் நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக இப்போது மாஸ்கோ சென்றுள்ளனர்.

### ஐ.அ.குடியரசுக்கு ரஷ்ய போர்க் கப்பல்

மாஸ்கோ, ஜூலை 18

ரஷ்யா புதிய போர்க்கப்பலொன்றை ஐ. அ. குடியரசுக்கு அனுப்பிவைத்துள்ளது. இந்தக் கப்பலுடன் ரஷ்யா இதுவரை 8 போர்க் கப்பல்களை ஐக்கிய அரபுக் குடியரசுக்கு அனுப்பிவைத்துள்ளது.

### சிரியா கைதிகளை இஸ்ரேல் அனுப்பியது

டெல்அவிவ். ஜூலை 18

போரின்போது இஸ்ரேல் கைதுசெய்திருந்த 600 சிரிய நாட்டு கைதிகளை இப்போது இஸ்ரேல் திருப்பி அனுப்பியுள்ள .

## விளையாட்டு மைதானத்தில்

## மின்னல் தாக்கி விளையாட்டு வீரர் மாண்டார்

புடாபெஸ்ட், ஜூலை 18

ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்டில் நடைபெற்றுக்கொண்டிருந்த உதைபந்தாட்டத்தின்போது உதைபந்தாட்ட வீரர் ஒருவர் மின்னலால் தாக்குண்டு மரணமாஞர்.

வேறு விளையாட்டு வீரர்களும் பொதுமக்களும் காயமடைந்தனர்.

## '10 வருடங்களானுலும் சண்டை தொடரும்'

### கி. நைஜீரிய அதிபர் சவால்

லாகோஸ், ஜூலை 18

சமஷ்டி நைஜீரியாவிலிருந்து பிரிந்து சென்ற 'பியாவ்ரா' என்று அழைக்கப்படும் கிழக்கு நைஜீரியாவின் அதிபர் கேர்ணல் ஒச்சுக்கு பத்து வருடங்கள் சென்ருலும் சமஷ்டித் துருப்புகளுடனுன போரைத் தொடர்ந்து நடத்தத் தாம் தயாராக விருப்பதாக வெளிநாட்டு பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்,

தமது மக்களும் அதற்குத் தயாராக விருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் பேட்டியளித்துக் கொண்டிருந்த சமயத்தில் மாணவர்கள் ஆயுதங்களுடன் போருக்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

### அசாமில் ரூ. 1/2 கோடி நாசம

புதுடில்லி, ஜூலை 18

ஆசாமில் ஏற்பட்ட வெள்ளத்தால் ரூ.1/2கோடிவரையான பயிர்கள் சேதப்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### நக்ஸல் பாரியில் அமைதி

கல்கத்தா, ஜூலை 18

தீவிரவாதிகளின் கிளர்ச்சிகளை அடுத்து நக்ஸல் பாரி பகுதியில் நிலவி வந்த குழப்ப நிலை இப்போது கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அமைதி நிலவுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டிலிருந்து வரும் செய்திகள்

## சென்னையில் மீண்டும் தீ விபத்துக்கள்

### 8 குடிசைகள் நாசம்

சென்னை, ஜூலை 18

சென்னையின் சில பகுதிகளில் நேற்று 6 சிறிய தீவிபத்துக்கள் நேர்ந்ததாக அறிவிக்கப்பட்டது.

இத்தீவிபத்துக்கள் காரணமாக 8 குடிசைகள் எரிந்து சாம்பலாகின. உயிர்ச்சேதமெதுவும்ஏற்படவில்லையென அறிவிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் தீ பரவாமல தடுப்பதற்கு தீயணைக்கும் படையினர் தீவிரமுயற்சி மேற்காண்டனர்.

### இளவரசர்கள் சங்கம்

புதுடில்லி, ஜூலை 18

இந்திய இளவரசர்கள், போபாலில் சந்தித்து முன்னுள் ஆட்சியாளர் சங்கம் என்ற பெயரில் சங்கம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இந்திய அரசாங்கம் இவர்களுக்கிருந்த சலுகைகளைப் பறிமுதல் செய்ததைத் தொடர்ந்தே அவர்கள் இவ்வித முயற்சி மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சங்கம் மூலமாகத் தமது உரிமைகளைப் பாதுகாக்கப்போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### 200 அமெரிக்க யுத்தக் கைதிகள்

சைகோன், ஜூலை 18


வட வியட்னுமில் 200 அமெரிக்க யுத்தக் கைதிகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### விஜயலட்சுமி பண்டிட் யோசனை

புதுடில்லி, ஜூலை 18

இந்தியா சீனுவுடனுன தனது ரஜீய தொடர்களை நிறுத்திக்கொள்ள வேண்டுமென திருமதி விஜயலட்சுமி பண்டிட் யோசனை தெரிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்காவுடன் இந்திய ராஜீய தொடர்புகளை நிறுத்திக்கொண்டுள்ளது போல் சீனுவுடனுன ராஜீய தொடர்புகளை நிறுத்திக்கொள்ளலாமென அவர் [illegible] தெரிவித்துள்ளார்.



சம்பைன் போத்தலை உடைத்து அமெரிக்காவின் புதிய விமானம் தாங்கிக் கப்பலை சம்பிரதாய முறைப்படி இயக்கிவைக்கிருர், காலஞ்சென்ற முன்னுள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன். எப். கென்னடியின் அருமைப் புதல்வி 'கரோலின்'. வேர்ஜினியாவில் இந்த விழாவில் திருமதி கென்னடி, மகள், ஜனாதிபதி ஜோன்சன் ஆகியோர கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படம் இது. 15.000க்கு மேற்பட்டவர்கள் இந்த விழாவுக்கு வந்திருந்தனர். இந்தப் புதிய விமானம்தாங்கிக் கப்பலில் 5,000 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

## சுகர்ணோவை ஆதரித்து ஆர்ப்பாட்டம்

### பலர் கைது

ஜாகர்த்தா, ஜூலை 18

**முன்னுள் இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகர்ணோவை ஆதரித்து ஆர்ப்பாட்டம் செய்த பலர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

இந்த ஆர்ப்பாட்டக்காரர்களில் மாணவர்களும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் சுகர்ணோவுக்கு மீண்டும் ஆதரவு தேடும் வகையில் ஆர்ப்பாட்டத்தை நடத்தியபோதே கைது செய்யப்பட்டனர்.

### மனைவிகள் சொத்து சுவீகரிப்பு

இதற்கிடையே டாக்டர் சுகர்ணோவின் மனைவிகளது சொத்துக்கள்பூராவும் அரசாங்கம் சுவீகரித்துக்கொண்டுள்ளதாக வெளியுறவு மந்திரி திரு. ஆதம் மாலிக் அறிவித்தல் செய்துள்ளார். சுகர்ணோவின் மனைவிகள் வசித்து வந்த பெரும் உல்லாசமாளிகைகளையும் அரசாங்கம்சுவீகரித்துள்ளது.

## ஹொங்கொங்கில் நிலைமை மோசமாகிறது

### 17 வயது வாலிபன் குத்திக் கொலை

ஹொங்கொங், ஜூலை 18

ஹொங்கொங்கில் நேற்று ஏற்பட்ட 3 வெடிப்புக்களில் சிலர் காயமுற்றனர்.

17 வயது வாலிபன் ஒருவன் குத்திக்கொலை செய்யப்பட்டுக் கிடந்ததைப் பொலிசார் கண்டனர். இது சம்பந்தமாகப் பொலிசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

நேற்று முன் தினமும் 3 பேர் கொலை செய்யப்பட்டனர். இந்த நாச வேலைகள் சம்பந்தமாக பொலிசாரும் இராணுவத்தினரும்சேர்ந்து இதுவரை சுமார் 600க்கு மேற்பட்டவர்களைக் கைது செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம யாத்திரிகர்களுக்கு தாகசாந்தி அளிக்க முடிவு

யாழ்ப்பாணம், புதன்
கடந்த பத்து வருடங்களாகச் செய்ததுபோல இவ்வருடமும், கதிர்காமத்திலிருந்து திரும்பிவரும் யாத்திரிகர்களுக்குத் தாகசாந்தி அளிப்பதென கொடிகாமம் தாகசாந்தி தொண்டர்சபை நேற்று தீர்மானித்துள்ளது.

இதற்கெனச் சுமார் 5000 இளநீர் சேகரிப்பதெனவும், யாத்திரிகர்களுக்கு காப்பி, தேநீர் வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

புகையிரதத்தில் வரும் யாத்திரிகர்களுக்கு மட்டுமன்றி பஸ், லொறிகளில் வரும் யாத்திரிகர்களுக்கும் தாகசாந்தி அளிப்பதென்றும், இரவில் வரும் யாத்திரிகர்களுக்குத் தங்குவதற்கு வசதியளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கொடிகாமம் கிராம முன்னேற்றச் சங்கமண்டபத்தில் திரு. சி. அம்பலவாணர் தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. கே. கந்தசாமி, இணைச் செயலாளர்கள்: திருவாளர்கள் எஸ் கைலாயநாதன், கே. உருத்திரநாதன், தனாதிகாரி: திரு. எம். விக்னேஸ்வரன். 15 பேர் கொண்ட கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

அ. நி.

# பழைய சாதம் அருந்தியபின் நால்வர் மரணம்

## இரத்தினபுரியில் சம்பவம்

இரத்தினபுரி, புதன்
பழைய சாதம் சாப்பிட்டு ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மரணமான சம்பவமொன்று இரத்தினபுரியில் நேற்று நடந்துள்ளது.

பாகொடைப் பகுதியைச் சேர்ந்த கரோலிஸ் அப்பு, அவரது மனைவி ஜென்நோனு, மகன் ரஞ்ஜித், மற்றொரு மகன் சிறில ஆகிய நால்வரும் மரணமானார்கள்.

அக்குடும்பத்தில் எஞ்சியிருந்த 11 வயதான ஹீன்மெனிக்கா, பொலிஸாருக்கு இச்சம்பவம் பற்றிக் கூறும்போது, முதல் நாளிரவு சமைத்த சோற்றையும், பலாக்காய்க் கறியையும் மறுநாள் காலை குடும்பத்திலுள்ளவர்கள் சாப்பிட்டதாகவும், சிறிது நேரத்தால் தனக்கு வயிற்றுவலி ஏற்பட்டு வாந்தியெடுத்ததாகவும் தெரிவித்தார்.

முதலில், இவர் கிலிமலை ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து இரத்தினபுரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். ஆஸ்பத்திரியில் அவருக்குப் பெற்ரேரினதும், சகோதரர்களினதும் மரணச்செய்தி தெரிவிக்கப்பட்டது.

மரணமடைந்தவர்களின் வயிற்றிலுள்ள பொருட்களை பரிசோதனைசெய்ய ரசாயனப் பரிசோதகருக்கு அனுப்பும்படி பிரேத பரிசோதனை நடத்திய சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். மரண விசாரணை நடத்திய திரு. டபிள்யு. பீரிஸ், மேலும் விசாரணைசெய்ய உத்தரவிட்டார்.

## பஸ் பிரயாணிகள் கஷ்டம்

நாரந்தனை, செவ்.
யாழ்ப்பாணம்-ஊர்காவற்றுறைபஸ்சேவைமோசமாகி நாளுக்குநாள்வருகிறதுநேற்றிரவு 7-30 மணிக்குநாரந்தனை ஊடாக யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறைசேவையில் ஈடுபடும் பஸ் திடீரென சேவையில் ஈடுபடாததால் பிரயாணிகள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகிருர்கள். இதனுல் நாரந்தனை, கரம்பன ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகள் சுருவில் பஸ் மூலம் சென்று புளியங்கூடல் சந்தியில் இறங்கி நடந்து செல்லும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

## மாணவருக்கு கமத்தொழில் நூல்

இமையாணன், செவ்.
கமத்தொழில் சம்பந்தமான ஒரு புத்தகம் அநேக பாடசாலைகளில் வழங்கப்பட்டு வருகிறது. இப் புத்தகம் இலங்கை பூராவும் வழங்குவதற்கென சுமார் 42000 பிரதிகள் தமிழில் அடிக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 15000 ஆயிரம் பிரதிகள் யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு வழங்கப்படுமாம்.

## 6 மாத கடுழியம்

காங்கேசன்துறை, செவ்.
சங்கானையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஆறுமுகம் என்பவர் அதே ஊரைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவரைத் தாக்கிக் காயம் உண்டுபண்ணியதாகச் சங்கானைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டு மல்லாகம் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கில் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நிறசிங்கா எதிரிக்கு 6 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.


## 'கார்டியன்' கருத்து

லண்டன், ஜூலை 18
வடக்கு வியட்னமில் அமெரிக்காவிரைவில் குண்டு வீச்சை நிறுத்தக் கூடும் என்று பிரிட்டிஷ் பத்திரிகையான 'கார்டியன்' அபிப்பிராயம் தெரிவித்துளது.

## சைக்கிளில் கதிர்காம யாத்திரை

யாழ்ப்பாணம், ஞாயிறு
நல்லூர் கந்தசாமி கோவிலிலிருந்து ஒரு வாலிபர் கோஷ்டி சயிக்கிளில் கதிர்காமத்துக்கு யாத்திரை சென்றுள்ளது. இக் கோஷ்டியில் அதிகமானவர்கள் வேலணையைச் சேர்ந்தவர்களாவர். இக் கோஷ்டிக்கு சுண்டிக்குழியைச் சேர்ந்த திரு. மு. தர்மலிங்கம் தலைமை தாங்குகிருர்.

## ஆடிவேல் விழாவில் இன்னிசை



தெல்லிப்பளை, சங்கீதபூஷணம் திருமதி விஜயலட்சுமி ஆறுமுகசாமியின் இன்னிசைக்கச்சேரி கொழும்பு ஆடிவேல் விழாவில் இம்மாதம் 21-ம் திகதி பிற்பகல் நடைபெறவிருக்கிறது. பக்கவாத்தியங்களாக கலைமணி பிரம்மஸ்ரீ எஸ். சோமாஸ்கந்தசர்மா வயலினும், மயிலை வித்வான் திரு. பி சின்னராசா, மிருதங்கமும், வித்துவான் திரு. தமிழ்நாதன் கடமும் வாசிப்பார்கள்.

## சேவைநலம் பாராட்டுவிழா

வேலணை. செவ்.
தீவுப்பகுதிக் காரியாதிகாரியாக கடந்த நான்கு வருடங்களாகக் கடமையாற்றி மாற்றலாகிச் சென்ற திரு. பி. எல். பற்றிக்கின் சேவைநலம் பாராட்டுவிழாவும், அவரது இடத்திற்குக் காரியாதிகாரியாக நியமனம் பெற்றிருக்கும் திரு. எஸ். விநாயகலிங்கத்திற்கு வரவேற்புபசார விழாவும் வேலணை, மேற்கு நடராசா வித்தியாசாலைமண்டபத்தில் திரு. வ. நவரெத்தினம் எம். பி. தலைமையில் நடைபெற்றது. பல பிரமுகர்கள் பாராட்டுரை வழங்கினர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 19-7-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை-கே. அருணாசலம்தேசிகர். 6-40 இஸ்லாமியநற்சிந்தனை 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வளம், 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்
பகல்12-00சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள் 5-30 சிறுவர்நிகழ்ச்சி— 'ஓடிவிளையாடு பாப்பா'.

இரவு 6-15 பாட்டு— சவுந்தரலட்சுமி வடிவேல், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 புல்லாங்குழலிசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு — சுவாமி விபுலானந்தர் 9-45 [illegible] 10-00 [illegible]

# நவம்பர் 18-ம் திகதி பெரேராவை கடைசியாகச் சந்தித்தேன்

## களத்தாவை இரட்டைக் கொலை வழக்கில் குமாரசாமி தொடர்ந்து சட்சியம

அனுராதபுரம், புதன்
"கடந்த வருடம் நவம்பர் 18-ம் திகதி ஒரு 'புல்டோசரை'த் திருத்துவதற்காக பெரேரா களத்தாவைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அன்று தான் அவரை நான் கடைசியாகச் சந்தித்தேன்."

களத்தாவை இரட்டைக் கொலை வழக்கில் சாட்சியமளித்த ஏ. கே. குமாரசாமி மேற்கண்டவாறு கூறினுர். இவ்வழக்கு நேற்றுக்காலை அனுராதபுரம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் அல்பிரட் டி. சொய்சா, களு அல்பேர்ட் லில்லிமாமா ஆகியோர் பி. கே. டி. பெரேரா, ஜூலியஸ் சந்திரசேகரா ஆகியோரைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குமாரசாமி மேலும்கூறியதாவது; பெட்ரோலும், டீசல் எண்ணெயும் நவம்பர் 18-ம் திகதி கொண்டுவரப்பட்டது. பெட்ரோல் கொண்டு சென்ற லொறியில் நானும் பீட்டர் பெரேரா, ஜினதாசா, அப்புகாமி ஆகியோரும் சென்ரேம். அப்புகாமி 7வது மைல் கட்டையில் இறங்கி விட்டார். வழியில் நாங்கள் 1.ம் எதிரியின் ஜீப்பைக் கண்டோம். ஜீப்பில் வின்சன்ட் இருந்தார். நாங்கள் லொறியை மறித்து அவருடன் கதைத்தோம். பெட்ரோல் இல்லாததால் ஜீப்நிற்பதாக அவர் கூறினுர். தான் வனமால்கொல்லவா நிலையத்திற்குச் செல்வதாகவும் அங்கிருந்து முக்கிய வேலைக்காக ஒரு மெக்கானிக்கைக் கொண்டுவரச் செல்வதாகவும் வின்சன்ட் கூறினுர். முக்கிய வேலைக்காக பி. கே. டி. பெரேராவை களத்தாவைக்குக் கொண்டு செல்லப் போவதாகவும் அவர் மேலும் கூறினுர்.

## இன்னும் நிலம் கிடைக்கவில்லை

புத்தளம், செவ்.
கொழும்பு மாவட்டத்தைச்சேர்ந்த 50விவசாயிகள் எட்டு மாதத்திற்கு முன்பு ஐக்கிய விவசாயிகள் சங்கத்தை ஆரம்பித்து, புத்தளம் மாவட்டத்தில், 500 ஏக்கர் காட்டு நிலத்தை விவசாயத்திற்காக வழங்கும்படி அரசாங்கத்திடம் கோரினுர்கள்.

அரசாங்க இலாகாக்களின் தாமதத்தினுல் இந்த விவசாயிகளுக்கு இன்னும் நிலம் வழங்கப்படவில்லை. நவம்பர் மாதத்தின் முன் குறைந்தது 100 ஏக்கர் நிலத்தையாவது திருத்துவதற்கு. சங்கத்தினர் தயாராயுள்ளனர்.

## சங்காபிஷேகம்

சங்கானை, செவ்.
சித்தன்கேணி சிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வர ஆலய அஸ்தோத்திர சங்காபிஷேகம் இம்மாதம் 20ம் திகதி நடைபெறும். அன்று பகல் அடியார்களுக்கு அன்தானம் வழங்கப்படும் எனவும் இரவு சிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வரர் முன்றும் வீதி வலம் வருவார் எனவும் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறுமெனவும் அறிவிக்ககப்படுகிறது.

## பொன்னுலையில் நன்னீர் கஷ்டம்

சுழிபுரம், செவ்.
பொன்னுலைபகுதி மக்கள் குடிதண்ணீர் கஷ்டத்தினுல் மிகவும் அவதியுறுகின்றனர்.

தினமும் நல்ல தண்ணீர் எடுப்பதற்காகப் பல மைல் தூரம் நடந்து சென்று தண்ணீர் பெற்று வருகின்றனர். கிணற்று நீர் வற்றி உப்பு நீராக மாறுவதால் கால் நடைகள் கூட கிணற்று நீரைக் குடிக்க மறுக்கின்றன. கிராமசபை மூலம் மீண்டும் தண்ணீர் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியில் அப்பகுதிக் கிராமசபை உறுப்பினர் ஈடுபட்டுள்ளார்.

## சன்மார்க்க சபை ஆண்டு விழா

யாழ்ப்பாணம், புதன்
குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் 32-வது ஆண்டு விழா நாளை மாலை சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. திரு. கே. பூரணம் பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் 'இலக்கியத்தில் கிழக்கும்மேற்கும்' என்னும் விஷயம் பற்றி கோப்பாய் வட்டார வித்தியாதிகாரி திரு. ஆ. சிவகுருவும், 'இலக்கிய ஓசை' பற்றி வித்துவான் க. கணபதிப் பிள்ளையும் உரையாற்றுவர். 'இறுதி பரிசு' நாடகமும் மற்றும் தாளவாத்தியக் கச்சேரியும் விழாவில் இடம் பெறும் விழாவையொட்டி சன்மார்க்கசபையினர்வெளியிட்டுள்ள 31—32ம் வருட தொகுப்பறிக்கை நூலில், சபை பல்வேறு துறைகளிலும் ஆற்றியுள்ள பணிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.


**கூப்பன் வேண்டாம்**

| | | |
|---|---|---|
| நைலோன் ஒகன்டி | — | 4-00 |
| நைலோன் டபட்டா | — | 4-50 |
| பிறிண்டட் மஸ்லீன் | — | 4-04 |
| டகூர் | — | 3-40 |
| பிறிண்டட் சில்க் | — | 2-60 |
| நிற டிரில் | — | 2-43 |
| வெள்ளை டிரில் | — | 2-12 |

**பொருமால்ஸ்**
(C. W. E. பிடவை மாளிகை)
49, மெயின் வீதி, — யாழ்ப்பாணம்



**THE JAFFNA ACADEMY & SCHOOL OF TECHNOLOGY**
CHUNDIKULI

Term closes for holidays on July 28th, 1967 and reopens on 21st August, 1967

There will be special classes for The Advanced Level and University Entrance and Ordinary Level (December) Examinations in both English and Tamil media.

Classes in Electrical Engineering practice and Survey Draftsmanship and Building Construction are conducted by well qualified and experienced instructors.

Applications for new admissions must be made before 15th August, 1967.

Director.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரஸ்தா போக்குவரத்து அறிவித்தல்

## 1967-ல் நடைபெறும் நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவ விழா

மேற்படி விழாவின்பொருட்டாக 11-8-67 தொடக்கம் 5-9-67 வரை உட்பட்ட நாட்களிலும் கீழ்க்கண்ட ரஸ்தாக்களில் யாவும் 'சகலவித வாகனப்போக்குவரத்துக்களுக்கும் மூடப்பட்டிருக்கும்.

1. அரசடிச் சந்திக்கும் இரண்டாவது மைல் கல்லுக்கு மிடையில் உள்ள பருத்தித்துறை வீதியின் அந்தப் பகுதி.

2. பண்டாரக்குளம் ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக்கும் இடையிலுள்ள கோவில் றோட்டின் அந்தப்பகுதி.

3. பருத்தித்துறை வீதிக்கும் செட்டி ஒழுங்கைக்கு மிடையில் உள்ள செட்டித்தெருவின் அந்தப் பகுதி.

வாகனப் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருக்கும் எல்லைக்குள் வசிப்பவருக்கும், அரசாங்கக் கடமையின் நிமித்தம் செல்லவேண்டிய உத்தியோகத்தர்களுக்கும் கோவில் வழவில் நிறுவப்பட்டிருக்கும் தற்காலிகப் பொலிஸ் நிலையத்தில் 10-8-67 பிற்பகல் தொடக்கம் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

### வாகனங்கள் பிரிந்து செல்லல்

வாகனப் போக்குவரத்துச் களில் சாரதிகள் கீழ்க் காணும் பாதைகளில் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

1. யாழ்ப்பாணத் திசையிலிருந்து கோப்பாய் நோக்கிப் போகும்போது (அல்லது எதிர்த் திசையில்) நாவலர் றோட், நல்லூர் குறுக்கு றோட், முதலியவற்றில் செல்லுதல் வேண்டும்.

2. அரசடி றோட் வழியாக கோப்பாய் நோக்கிப் போகும்பொழுது (அல்லது எதிர்த் திசையில்) வைமன் றோட், நாவலர் றோட், நல்லூர் குறுக்குத்தெரு முதலியவற்றில் செல்லுதல் வேண்டும்.

### வாகனங்களை நிற்பாட்டி வைத்தல்

வழிபடுவோரின் வசதியை உத்தேசித்து வாகனங்களை நிற்பாட்டி வைப்பதற்கான மூன்று இடங்கள் ஒதுக்கி வைக்கப்படும். மேலும் இவ்விடங்களை நன்கு பாவிக்குமாறு சாரதிகள் அனைவருக்கும் சிபார்சு செய்யப்படுகின்றது.

### மேற்படி இடங்களாவன

1. அரசடி றோட் ஊடாக கந்தசாமி கோவிலுக்கு வரும் வாகனங்களை அம்மன் கோவில் மைதானத்தில் நிற்பாட்டலாம்.

2. தென்பகுதியிலிருந்து கோவிலுக்கு வரும் வாகனங்களை கைலாசபிள்ளையார் கோவில் மைதானத்தில் நிற்பாட்டலாம்.

3. கோப்பாய் திசையிலிருந்து கோவிலுக்கு வரும் வாகனங்களை முத்திரச்சந்தை மைதானத்தில் நிற்பாட்டலாம்.

ஆர் வி. தவராசா
பொலிஸ் அலுவலகம், உதவிப் பொலிஸ் அதிபர்,
யாழ்ப்பாணம். யாழ்ப்பாண மாவட்டம் (1)
16-7-1967. (17)

# இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம்

## அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் மீன், வெறும் பெட்டிகள், ஐஸ் முதலியன கொண்டு செல்லுதல்

யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் மீன், ஐஸ், வெறும் பெட்டிகள், மீன் பெட்டிகள் கொண்டுசெல்வதற்கு, த. பெ. இல. 258, கொழும்பிலுள்ள இலங்கை மீன்பிடிக் கூட்டுத் தாபன ஜெனரல் மனேஜரால் 1967-ம் ஆண்டு ஜூலை 25ம் திகதி நண்பகல் வரை சீல்போட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் பின்வரும் அடிப்படையில் இருக்க வேண்டும்:-

1. பருத்தித்துறையிலிருந்து மயிலிட்டிக்கும் திரும்பவும் மீன், ஐஸ், வெறும் மீன் பெட்டிகள் முதலியன கொண்டு செல்லல். நாள் விகிதம் [காலை 5 மணி முதல் மாலை 4 மணி வரை]

2. யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் மீன் கொண்டு செல்லல். [ஒரு நடைக்கு கூலி]

இந்த கூட்டுத்தாபனத்தால் கூடுதலான செலவுகள் கொடுக்கப்படமாட்டாது.

'மீன், ஐஸ்' முதலியன யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் கொண்டு செல்லல்' என்ற விலாசமிட்டு இக் கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபாலில் கீழ் கையொப்பம் இடுபவருக்கு குறித்த நேரத்துக்குள் அனுப்பப்பட வேண்டும்.

வேறு விபரங்கள் உதவி மனேஜர், இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம், ஐஸ் பிளான்ட் கட்டடம், கரையூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜெனரல் மனேஜர்
15 ஜூலை 1967 கோல் பேஸ், கொழும்பு - 3.
18

# திருடியவருக்கு நன்னடத்தைப் பிணை

வல்வெட்டித்துறை, செவ். கரவெட்டி கிழக்கு தம்பையா தம்பிராசா என்பவர்வீட்டில் தெடுத்தணையை சேர்ந்த கந்தையா தனபாலசிங்கம் என்பவர் இம்மாதம் 2ம் திகதி இரவு உட்புகுந்து 28ரூபாவை களவாடியதாக பருத்தித்துறை பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு.கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

விசாரணையின் முன்னர் மாஜிஸ்திரேட் எதிரானை

[6-ம் பக்கம் பார்க்க]

# உ
## விநாயக ஐக்கிய பண்டகசாலை மனேஜர் தேவை

தராதரம்.

1. எஸ். எஸ். சி. பத்திரத்தோடு கூட்டுறவுப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

2. வயது 22—30 -க்கு இடைப்பட்டவராய் 5வருட வியாபார அனுபவம் உடையவராய் இருத்தல்.

3. பிணைப்பணம் ரொக்கம் 1000 ரூபாவோடு ரூபா 2000-க்கு உறுதிப் பிணையும் கட்டல்வேண்டும்.

4. விண்ணப்பப்பத்திரத்தோடு 3 நற்சாட்சிப் பத்திரப் பிரதிகள்.

5. பஞ்சப்படி உட்பட மாதச்சம்பளம் 100 ரூபா. 5 ரூபா படியேற்றத்தில் இறுதிச்சம்பளம் 150 ரூபா.

6. 26-7-67 -க்கு முன் காரியதரிசிக்குப் பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கவும்.

நா. செல்லத்துரை,
காரியதரிசி.
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். 16

# மரணஅறிவித்தல்

## திருமதி குமாரசாமி நாகமுத்து அவர்கள்

நெடுந்தீவு மத்தி, திரு. சின்னத்தம்பி குமாரசாமி (பிரபல வியாபாரம் - மாத்தளை) அவர்களின் அருமை மனைவியும், பரராசசிங்கம் (கிராம அபிவிருத்தி சிறுகைத்தொழில்இலாகா-மாத்தளை), குணநாயகம் (நீர்ப்பாசன இலாகா-செங்கலடி), திருமதி சொர்ணம்மா சுப்பிரமணியம், புண்ணியமூர்த்தி (கணக்குப் பரிசோதனை இலாகா - கொழும்பு), திருமதி கமலாம்பிகை மருதையினார் (இங்கிலாந்து), இலிங்கநாயகம் (லுணுகலைத் தோட்டம்), கோபாலகிருஷ்ணன் (தொழில் நுட்பக் கல்லூரி, கட்டுப்பெத்த) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. வி. சுப்பிரமணியம் (நெடுந்தீவு விநியோகஸ்தர்), திருமதி இரத்தினம்பிகை பரராசசிங்கம் (உடுவில் மகளிர் கல்லூரி), திருமதி தனலட்சுமி குணநாயகம், திரு. நா. மருதையினார் (இங்கிலாந்து) ஆகியோரின் மாமியாரும், திரு. இ. சோமசுந்தரம், காலஞ்சென்ற திரு. இ. பெருமையினார், திரு. இ. யாதவராயர் (ஆகியோரின்) சகோதரியுமான திருமதி நாகமுத்து குமாரசாமி அவர்கள் காலமாகிவிட்டார்கள். அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-7-67 வியாழக்கிழமைநெடுந்தீவில் நடைபெறும். (19)

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை[illegible] [illegible] 2-30
எம். ஜி. ஆர்.
கே. ஆர். விஜயா
நடித்த
பணம் படைத்தவன்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 4-45, 7-00, 9-45
Dirk Bogarde
Sarah Mile
in
SERVANT

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Stewar Granger
Dorian Gray
in
THE LEGION'S
LAST PATROL

# முதல் இடத்தை பெற்றார்

## நெல்விளைச்சல் போட்டியில்

சங்கானை, செவ்வாய்
கமத்தொழில் இலாகாவினரால் வலி-மேற்குப் பகுதியில் இவ்வருடம்நெல் விளைச்சல் போட்டி நடாத்தப்பட்டது. சண்டிருப்பாயைச் சேர்ந்தவரும் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகஸ்தருமான திரு. ஆர்சரவணமுத்து [வயது72]1ம் இடத்தைப் பெற்றிருந்தார்

இவ்வருடம் விவசாய விஸ்தரிப்பு பகுதியினர் வடமாகாணத்தில் நடாத்திய தேர்விலும் திரு. சரவணமுத்து 1ம் இடத்தைத்தட்டிக் கொண்டார்.

ஜப்பானிய முறைப்படி வரி நெல் நாட்டி ஏக்கர் ஒன்றுக்கு 129 புசல் அறுவடை செய்யப்பட்டதுகுறிப்பிடத்தக்கது. முதற்பரிசு யாழ். கைத்தொழில் பொருட்காட்சியின்பேது வழங்கப்படும்

# சம்பந்தருக்கு முதலிடம்

சாவகச்சேரி, செவ்.
நாவற்குளி மகாவித்தியாலய வருடாந்த இல்லப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. இ. கந்தையா தலைமையில் நடைபெற்றது. சாவகச்சேரி வட்டார கல்வி அதிகாரி திரு. மு. குணரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். போட்டிகளில் சம்பந்தர் இல்லம் 221 புள்ளிகளைப்பெற்று முதலாவது இடத்தைப்பெற்றது. மற்ற இல்லங்களின்புள்ளி விபரம்:

சுந்தரர்192, அப்பர் இல்லம்-173, சாம்பியன்கள் விபரம்:- மேற் பிரிவுசெல்வி து. செல்வநாயகி, க. சிவராசா, மத்திய பிரிவு செல்வி இ. இராசேஸ்வரி, ஆ. அமிர்தலிங்கம். கீழ்ப்பிரிவு. க. தெய்வேந்திரன், இ. வசந்தாதேவி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு . திரு. மு. குணரத்தினம் பரிசில்கள் வழங்கினார்.

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily 4-45, 7-00, 9-45
FROM BEIRUT
WITH LOVE
With Frederic Stafford
As Secret Agent 505

# வரிவிளம்பரம்

## தேவை

ஒப்பரேட்டர்கள்....

யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டரொன்றில் கடமையாற்றுவதற்கு இரு ஒப்பரேட்டர்களும், புக்கிங் கிளாக்குகளும் உடனடியாகத் தேவை. ஒப்பரேட்டர்கள் வேலைக்கு விண்ணப்பிப்பவர்கள் திறமையும் அனுபவம் மிக்கவர்களாகவும் இருக்கவேண்டும். விளம்பர இலக்கம் 2426, ஈழநாடு மே/பா, தபால் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2426

## விற்பனைக்கு

தோட்டம்:

80 ஏக்கர் நெல், தென்னை, முந்திரி தோட்டம் ஆனையிறவுக்கருகில் உள்ள இயக்கச்சியில் விற்பனைக்குண்டு. முழுசாகவோ, துண்டுகளாகவோ கொடுக்கலாம். பின்வரும் விலாசத்துக்கு எழுதவும்: ஹவுஸ் அன்ட் புறொப்பெர்டி ட்றேட்ஸ் லிமிட்டெட், த. பெ. இலக்கம் 1077, கொழும்பு. 2427

# கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், புதன்
கட்டுடை சந்திக்கருகாமையிலுள்ள பஸ்தரிப்புநிலையத்தில் கூப்பன் புத்தகம் ஒன்று மானிப்பாயைச் சேர்ந்த திரு. கி. அல்வின்ஸ் என்பவரினால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

# பொங்கல்

சங்கானை, செவ்.
சங்கானை நாச்சிமார்கோவிலில் ஆடிப் பொங்கல்விழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. திரு. மா. கணேஸ் தலைமையில் பஜனையும் நடைபெற்றது.

வியாபாரம பெருக
விளம்பரம்செய்க

இன்று முதல்
குதூகல ஆரம்பம் !

| | |
|---|---|
| கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] | காமினி |
| ராஜ் [நீர்கொழும்பு] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] |
| விஜயா [மட்டக்களப்பு] | ஸ்ரீ கிருஷ்ணா [திருமலை] |

எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
ரி. ஆர். ராமச்சந்திரன் - நாகேஷ்
நடித்த
அன்பேவா
(ஈஸ்ட்மென் கலர்)
இசை:
எம். எஸ் விஸ்வநாதன்.
கதை, டைரெக்ஷன்:
ஏ. ஸி. திரிலோகசந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசை வெளியேற்ற இரியகொல்லை முயற்சி?

## பிரதிநிதிகள் சபையில் பீட்டர் கெனமன் தகவல்

கொழும்பு, திங்கள்

கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை தேசிய அரசாங்கத்திலிருந்து சமஷ்டிக்கட்சியினரை வெளியேற்ற பகிரங்கமாக ஆதரவு திரட்டுகிறார் என்று திரு. பீட்டர் கெனமன் இன்று பிரதிநிதிகள் சபையில் கூறினார்.

சமஷ்டிக்கட்சியினரை வெளியேற்றுவதற்கு ஆதரவு தரும்படி எதிர்க்கட்சியினரைக் கூட பகிரங்கமாகக் கேட்டிருக்கிறார் என்றும் திரு. கெனமன் குறிப்பிட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்குக் கல்வி மந்திரி பதில் எதுவும் அளிக்கவில்லை. ஆனால் சபையில் குறுக்கீடுகளும் குழப்பமான நிலைமையும் ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில், 'மந்திரியை வெளியேற்ற நாங்கள் முயற்சி செய்கிறோம்' என்று டாக்டர் நாகநாதன் கூறுவது கேட்டது.

தேசிய அரசாங்கத்தில் ஒற்றுமையில்லை என்று குறிப்பிட்டு திரு. பீட்டர் கெனமன் பேசுகையிலேயே மேற்கண்ட கருத்தை வெளியிட்டார். அவர் மேலும் பேசுகையில் அரசாங்கத்தில் தொடர்ந்து இருப்பதா இல்லையா என்பது பற்றி வட்டுக்கோட்டை எம், பி, திரு. அமிர்தலிங்கமும் அவர் மனைவியும் பகிரங்கமாகச் சண்டை போட்டிருக்கிறார்கள் இச்சம்பவம் பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளது என்றார்.

இக்கட்டத்தில், 'இது முழுதும் பொய், உடனே வாபஸ் பெறவேண்டும்' என்று டாக்டர் நாகநாதன் வற்புறுத்தினார்.

திரு. கெனமன் மேலும் பேசுகையில், வட்டுக்கோட்டை எம். பி.யும் மனைவியும் குடும்ப விஷயமாகச் சண்டை போட்டதாகக் குறிப்பிடவில்லையென்றும் அரசியல் விஷயத்தைத் தாம் குறிப்பிட்டதாகவும் சொன்னார்.

அரசாங்கத்தில் ஒற்றுமையில்லை என்பதை திரு. பீட்டர்கெனமன் மேலும் வற்புறுத்துகையில், ஜே. ஆர். கோஷ்டி, டட்லி கோஷ்டி என்று பிரிவுகள் அரசாங்கத்தில் உருவாகியிருப்பதா பேசிக் கொள்ளப் பட்டது என்றார்.

### அவசரகாலம்

அவசரகால நிலைமையை வைத்துக் கொண்டே அரசாங்கம் ஆட்சி செய்கின்றது. கடந்த ஆண்டு பத்து நாட்கள்தான் அவசரகாலமில்லாமல் ஆட்சி நடைபெற்றது. இந்த வருடம் பத்து விநாடிகூட அவசரகாலமில்லாமல் ஆட்சி நடக்காது போலிருக்கிறது என்றும் திரு. கெனமன் சொன்னார்.

### உணவு உற்பத்தி

உணவு உற்பத்தி பற்றி அதிகம் பேசப்படுகின்றது. ஆனால் உணவு உற்பத்தி ஒரு விதத்திலும் அதிகரிக்கவில்லை. கடந்த ஆண்டு அரிசி உற்பத்தி பெருமளவு குறைவாகவே இருந்தது.

அரசாங்கம் உல்லாசப் பிரயாணத்தை விருத்தி செய்வதில் அல்ல ஹோட்டல்கள் திறப்பதில் தான் அக்கறை கொண்டிருக்கிறது என்று அவர் மேலும் கூறினார்.

அரசாங்கத்தை கூட்டுறவு மொத்தவிற்பனை ஸ்தாபன பண்டகசாலை யொன்றுடன் திரு. கெனமன் ஒப்பிட்டார். பண்டக சாலையில் அழுகிப் போன பழைய சாமான்கள் தான் கிடக்கிறது. அது போல் அரசாங்கமும் இருக்கிறது என்றார் திரு. கெனமன்.

## ‘பட்ஜட்டுக்குப் பின் கல்வி மசோதா வரும்’

— இரியகொல்லை

கொழும்பு, திங்கள்

இன்று சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது கல்வி மந்திரி திரு. இரியகொல்லை கடைசியாகப் பேசினார்.

தேசிய கல்வி மசோதா, பட்ஜட் நிறைவேறிய பின்னர் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்றும், அண்மையில் வெளியிடப் பட்ட கல்வி வெள்ளை அறிக்கையின் அடிப்படையில் இந்த மசோதா இருக்கும் என்றும், கல்வி மந்திரி கூறினார்.

1968-ம் ஆண்டில் விஞ்ஞான பாடங்களும் வைத்திய பாடங்களும் சிங்கள பாஷையில் நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்றும் திரு. இரியகொல்லை கூறினார்.

## ஆஸ்பத்திரி காவலாளியை நோயாளி தாக்கினாராம்

### பொலிஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் கடமையாற்றிவரும் காவலாளர் ஒருவர் நேற்று நண்பகலின் போது நோயாளியொருவரால்தாக்கப்பட்டாரம்.

இந்த நோயாளர் 14-ம் வார்ட்டில் சிகிச்சைபெற்றுவரும் ஒரு பொலிஸ் அதிகாரி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் வெளியில் சென்றுவிட்டு ஆஸ்பத்திரிக்குக் குழந்தைகள் வார்ட் மூலமாக தாம் சிகிச்சை பெற்றுவரும் வார்ட்டுக்குச் செல்ல முயன்றபோது சம்பந்தப்பட்ட காவலாளியால் தடுக்கப்பட்டபோதே இச்சம்பவம் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது.

இதுபற்றி குழந்தைகள் வார்ட் டாக்டர் வீரசூரியா ஆஸ்பத்திரி பொலிசாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் பொலிஸ் அதிகாரியை காவலாளர் அடையாளம்காட்டியதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு, பொன்ஸோவின் உத்தரவைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பகுதி சப் இன்ஸ்பெக்டர் திரு. இராசையா இதுசம்பந்தமாகப் பூரண விசாரணையை மேற்கொண்டுள்ளார்.

ஆஸ்பத்திரி காவலாளியைத் தாக்கியது சம்பந்தமாகப் பூரண நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் தாம் இன்று வேலைநிறுத்தத்தில் இறங்கப்போவதாக ஆஸ்பத்திரி ஊழியர் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ந. நி.)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால்யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜுலை மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இஸ்ரேல் படகுகளை

## சுட்டுத்தள்ள உத்தரவு

லண்டன், ஜுலை 17

இஸ்ரேல் படகுகள் சூயஸ் கால்வாய்க்குள் பிரவேசித்தால் அவைகளைச் சுட்டுத்தள்ளும்படி ஐக்கிய அரபுக்குடியரசு பீரங்கி படைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக கெய்ரோவில் இன்று அறிவிக்கப்பட்டது.

## இலங்கைக்கு இந்திய எரிபொருள்

புதுடில்லி, ஜுலை 17

இவ்வருடம்சுமார்90லட்சம் ரூபாய் அந்நிய செலாவணி கிடைக்கக்கூடிய பெட்ரோலையும் டீசல் எண்ணெயையும் இந்தியாஇலங்கைக்குஅனுப்பவிருக்கின்றது.

இதன்படி இவ்வருடம் 36 ஆயிரம் டன் டீசல் எண்ணெயும் 16 ஆயிரம் டன் பெட்ரோலும் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கிடைக்கும். இவைகளில் ஒரு பகுதி ஏற்கனவே இலங்கைக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

### திருடியவருக்கு...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தனபாலசிங்கத்தைக் குற்றவாளியாகக்கண்டு ஒரு வருடத்துக்கு 250ரூபா நன்னடத்தைப்பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

### மாஜிமேயர்...

[1ம்- பக்கத் தொடர்ச்சி]

வும் திரு. துரையப்பா தெரிவித்தார்.

மாநகரசபை நிர்வாகத்தைக் கவனிக்கும் விசேஷ ஆணையாளர்கள் பாரபட்சம் காட்டுவதுபற்றியும் தாம் பிரதமரிடம் எடுத்துக்கூறப் போவதாகவும் அவர் சொன்னார். பிரிவு கவுன்சில் தீர்ப்பளித்த பின்னரும், விரைவில் யாழ்ப்பாணமாநகரசபையின் தேர்தல் நடைபெறுமென உள்ளூராட்சிஅமைச்சரும், உதவி அமைச்சரும் பார்லிமெண்டின் இருசபைகளிலும் வாக்குறுதியளித்துப் பல மாதங்கள் கடந்த பின்னரும்கூட தேர்தல் நடைபெறாமல் ஒத்திவைக்கப்பட்டிருப்பது வேடிக்கையாக இருக்கிறதென்றும் திரு. துரையப்பா கூறினார்.

அடம்பனில்

## பயிர்ச்செய்கை குழுக்களின் சமாசம்

மன்னார், செவ்வாய்

நெற்காணி மசோதாவின் கீழ் ஸ்தாபிக்கப்படவேண்டிய பயிர்ச் செய்கைக்குழுக்களின் சமாசம் இங்கு முதன் முறையாக அங்குரார்ப்பணம் செய்யப்படுவது மகிழ்ச்சியளிப்பதாக சமாச இயக்குநரான கமத்தொழிற் சேவைப்பகுதி பெரும்பாக அதிகாரி ஜனாப் ஏ. எல். இப்ருகீம் லெப்பை சமாசத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

அடம்பன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு மன்னர் மாவட்ட கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர் திரு. வி. ஸி. கனகரத்தினமும் மன்னார் கச்சேரி உயர் அதிகாரிகளும் மாந்தைப் பிரிவிலுள்ள பயிர்ச்செய்கைக் குழுக்களின் பிரதிநிதிகளும் சமுகமளித்திருந்தனர்.

உத்தியோகத்தர் தெரிவில் சமாசத் தலைவராக திரு. ஏ. கே. பிரான்ஸிஸும் காரியதரிசியாக திரு. ம. செபஸ்தியாம் பிள்ளையும், தனதிகாரியாக ப. கந்தையாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அதன்பின் நடைபெற்ற கருத்தரங்கில் மன்னார் மாவட்ட உணவு உற்பத்திப் பொறுப்பாளரான திரு. எஸ். சுப்பிரமணியம் அரசாங்கத்தின் அதி உத்வேக உணவு உற்பத்தித் திட்டம் பற்றியும் தற்போது மன்னார்ப் பகுதியில் ஏக்கருக்கு சராசரி 48 புசல் நெல் விளைவதாகவும் இதனை இரட்டிப்பாக்க கமக்காரர்களை சமாசமூலம் உற்சாகப் படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. கே. நாகலிங்கம், போதனாசிரியர் திரு. எஸ். லிங்கநாதபிள்ளை, திரு ஞா. ஆரோகணம் பிள்ளை, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கே. ஸி. பேக்மன் ஆகியோரும் உரையாற்றினர்

## தொழிலாளியை தாக்கினாராம

### சங்கம் புகார்

திருகோணமலை, செவ்வாய்

தம்பலகாமம் கிருஷிக நிலையப் பொறுப்பாளர் தொழிலாளர்வரை இம்சைக் குள்ளாக்கியது சம்பந்தமாக உடனடியாக விசாரணை நடத்துமாறு விவசாய அதிபருக்கும்பேராதனை, திருகோணமலை மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தருக்கும் அவசரக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பிரஸ்தாப தொழிலாளரை ''உனக்கு வேலை கிடையாது, வெளியில்போ'' என்று கழுத்தைப் பிடித்து தள்ளியது சம்பந்தமாகவும், முறைப்பாடுகள் சம்பந்தமாகவும், தமிழ் பேசும் அரசாங் கப்பொதுஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளரினால் அனுப்பப்பட்ட அவசரக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### குண்டசாலை.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டதென்று கூறிய திரு. வீரசேகரா தமக்கு முன் பேசிய கல்வி அமைச்சர் ஆளும் கட்சிக்குள் ஐக்கியம் இருப்பதாகக் கூறியதைமறுக்கு முகமாக குண்டசாலை எம்.பி. பற்றிக் குறிப்பிட்டார்.

'யு.என். பி. அங்கத்தவரும் குண்டசாலை எம்.பி.யுமான திரு.விஜயசிறி அரசாங்கத்திலிருந்து வெளியேறவிருக்கிறார். தமது ராஜினாமாக்கடிதத்துடன் அவர் தயாராக இருக்கிறார். ஆனால் அவரை ராஜினாமாச் செய்ய வேண்டாமென்றும் வெளியேற வேண்டாமென்றும் அவரது நண்பர்கள் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று திரு. வீரசேகரா சொன்னார்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதானவிவாதத்தில் பேசுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

## விபத்தில் யாத்திரிகர்

களுத்துறை, செவ்

மினுவாங்கொடையிலிருந்து கதிர்காமத்துக்கு யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற ஒரு பஸ் வாடியா-மாங்கடை சந்தியில் கூ. மொ. வி. ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஊழியரான அகம்பொடே ஆரன்சிங்கோ என்பவரை மோதியது. 2 வயதான ஆரன்சிங்கோ ஸ்தலத்திலேயே மாண்டார்.

மாஜிஸ்டிரேட் நடத்திய மரணவிசாரணையின் பின் யாத்திரிகர் கோஷ்டி மற்றொரு பஸ்ஸில் கதிர்காமத்துக்குத் தனது யாத்திரையைத் தொடர்ந்தது. பஸ் சாரதி ரிமாண்டில் வைக்கப்பட்டார்.

கதிர்காமத்திலிருந்து யாத்திரிகர் கோஷ்டியொன்றுடன் வந்த லொறியொன்றுடன் வஸ்கடுவாவில் வெலிமடை கடைச் சந்தியில் ஒரு வண்டியுடன் மோதியதில் வண்டிக்காரர் மொலிஸ் பெரேரா தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்தார். அவர் நாகொடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். லொறிச் சாரதி தோமஸ் பெரேரா கைது செய்யப்பட்டு பின்னர்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

### 16 பேர் காயம

அக்குரஸ்ஸவிலிருந்து கதிர்காமத்துக்கு யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற ஒரு மோட்டார் வான், இன்டவென என்ற இடத்தில் சைக்கிளில் வந்த அம்பாந்தோட்டை தபாற்கந்தோரைச் சேர்ந்த தபால் சேவகர், அலெக்ஸாந்தர் என்பவரை மோதிவிட்டு வீதியிலிருந்து விலகி ஒரு பள்ளத்தில் பாய்ந்து புரண்டது. வானிலிருந்த 16 பேரும் காயமடைந்தனர். இவர்களில் 8 ஆண்களும், 2 பெண்களும் அம்பாந்தோட்டை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். எச். டபிள்யு சிறிவர்த்தன என்பவர் அபாயகரமான நிலையில் மாத்தறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

### இ. போ. ச. அதிகாரி பலி

இ.போ.சபை மாத்தறை டிப்போ உதவிமனேஜர் திரு. கிளாரென்ஸ் ஆர்தர் பெரேரா விபத்தில் சிக்கி, காலி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்படும் வழியில் மாண்டார்.

காலியில் ஜூரியாசக் கடமையாற்ற வந்த திரு. ஆர்தர் பெரேரா, இ. போ. சபையைச் சேர்ந்த மோட்டார் காரில் இ. போ. சபை சாரதியுடன் மாத்தறைக்குச் சென்றுகொண்டிருக்கையில் ஹபரடுவையில் தலவெல என்ற இடத்தில் விபத்தில் சிக்கினார். கார் வீதியிலிருந்து பாய்ந்து தென்னைமரக் குத்திகள் மீது மோதி நின்றது.

38 வயதான ஆர்தர் பெரேரா 6 பிள்ளைகளின் தந்தை. சாரதி பொடி அப்புஹாமியும் ஆபத்தான நிலையில் காலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org